بسم الله الرحمن الرحيم

# صفة العمرة

## உம்றாவின் சட்டங்கள்

التأليف

سماحة الشيخ/ عبد العزيزبن باز"رحمه الله"

مفتي العام المملكة العربية السعودية السابق

ترجمة إلى اللغة التاملية:

محمد عمران بن جمال الدين

*தொகுப்பு:*

*அஷ்ஷைக் அப்துல் அசீஸ் பின் பாஸ் (ரஹி)*

*தமிழில்:*

*மவ்லவி முஹம்மத் இம்ரான் (கபூரி)*

المكتب التعاوني للدعوة وتوعية الجاليات بالربوة

ISLAMIC PROPAGATION OFFICE IN RABWAH

P.O.BOX 29465 RIYADH 11457 - TEL 4454900 - 4916065

FAX 4970126 - E-Mail:rabwah@www.com

بسم الله الرحمن الرحيم

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! ஸலாத்தும் ஸலாமும் நபி (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் தோழர்கள் மீதும் உண்டாவதாக!
உம்ரா பற்றிய சுருக்கமானதொரு தொகுப்பை உங்களுக்குத் தருகிறேன்.

*உம்ரா செய்யும் என்னத்தோடு மீகாத் எல்லையை அடைந்தவர் தன்னை சுத்தம் செய்து குளித்துக் கொள்வது விரும்பத்தக்க செயலாகும். இவ்வாறே மாதவிடாய், பிரசவ தீட்டு உள்ள பெண்களும் செய்து கொள்ள வேண்டும். ஆனால் மாதவிடாய் உள்ள பெண்கள் குளித்து சுத்தமாகும் வரை தவாப்ஃ செய்வதை தவிர்ந்து கொள்ள வேண்டும். இஹ்ராம் என்று அணியப்படும் ஆடையில் மனம் புசுவதை தவிர்ந்து ஆண்கள் மேனியில் நருமணங்களைப் புசிக் கொள்ள வேண்டும். மீகாத் எல்லையில் குளிப்பதற்குரிய வசதி கிடைக்கவில்லையெனில் குற்றமில்லை. ஆனால் அவர் மக்கா சென்று தவாப்ஃ செய்வதற்கு முன் குளிப்பதற்கு வசதி கிடைத்தால் குளித்துக் கொள்வது விரும்பத்தக்கதாகும்.

*தைக்கப்பட்ட அனைத்து ஆடைகளையும் ஆண்கள் தவிர்ந்து கொள்வதுடன் ஒரு போர்வை ஒரு வேட்டி இவ்விரண்டையும் அணிந்து கொள்ள வேண்டும். ஆனால் அவ்விரண்டு ஆடைகளும் வெள்ளை நிறமாகவும், சுத்தமானதாகவும் இருப்பது சிறந்ததாகும். ஆண்கள் தலையை திறந்து கொள்வர். பெண்களைப் பொறுத்தமட்டில் கவர்ச்சியான ஆடைகளைத் தவிர்ந்து வலமையான ஆடைகளை அணிந்து கொள்வார்கள்.

*பின்பு வணக்கத்தில் நுழைவதை மனதில் என்னுவதோடு (லப்பைக்க உம்ரதன்) அல்லது (அல்லாஹும்ம லப்பைக உம்ரதன்) என்று நாவினால் மொழிந்து நிய்யத் வைக்க வேண்டும். வியாதிகள் காரணமாக அல்லது பலயீனம் காரணமாக தனது அமல்களை புரணமாக நிறைவேற்ற முடியாமல் போய்விடும் என அஞ்சினால், பின்வரும் துஆவை ஓதிக் கொள்வது சிறந்தது.
(பஇன் ஹபசனி ஹாபிசுன் பமஹல்லி ஹைசு ஹபஸ்தனி) லபாஆ பின்த் அல் சுபைர் என்ற பெண் நான் ஹஜ்ஜை நாடுகிறேன் ஆனால் புரணப்படுத்த முடியாத நிலை உள்ளது என நபி (ஸல்) அவர்களிடம் கேட்ட பொழுது ஹஜ்ஜை நிறைவேற்றும் படியும் எந்த இடத்தில் நிருத்தப்படுகிறதோ அந்த இடத்தில்,,, (ஆதாரம் புஹாரி முஸ்லிம்)
பின்பு நபி (ஸல்) அவர்கள் கூறிய பிரகாரம் தல்பியாவை சொல்ல வேண்டும்
"لَبَّيكَ اَللَّهُمَّ لَبَّيكَ، لَبَّيكَ لَا شَرِيكَ لَكَ لَبَّيكَ، إنَّ الحَمدَ وَالنِّعمَةَ لَكَ وَالمُلكَ، لاَ شَرِيكَ لَكَ"
லைப்பைக் அல்லாஹும்ம லைப்பைக். லைப்பைக் லா ஷரீகலக லைப்பைக்,இன்னல் ஹம்த வன்நிஃமத லக வல் முல்க். லா ஷரீக லக.
பொருள்:

வந்து விட்டேன். இறைவா உன்னிடமே வந்து விட்டேன். வந்து விட்டேன் உனக்கு யாதொரு இணையுமில்லை வந்து விட்டேன். புகழ், அருள், ஆட்சி அனைத்தும் உனக்கே! உனக்கு நிகராக யாருமில்லை.

இந்தத் தல்பியாவை அதிகமாக சொல்ல வேண்டும். மஸ்ஜிதுல் ஹராமை அடைந்து விட்டால், வலது காலை முன் வைத்து பின்வரும் துஆவை ஓதி நுழைவது சுன்னத்தாகும்,

بسمِ اللهِ وَالصَّلاَةُ وَالسَّلاَمُ عَلَى رَسُولِ اللهِ، أَعُوذُ بِاللهِ العَظِيْمِ وَبِوَجْهِهِ الكَرِيمِ وَسُلطَانِهِ القَدِيمِ مِـــنَ الـــشَّيطَانِ الرَّجِيمِ، اللَّهُمَّ افتَحْ لِي أَبْوَابَ رَحْمَتِكَ"

பிஸ்மில்லா வஸ்ஸலாது வஸ்ஸலாமு அலா ரஸூலில்லாஹ், அஊது பில்லாஹில் அழீம் வபிவஜ்ஹிஹில் கரீம் வசுல்தானிஹில் கதீம் மினஷ் ஷைதானிர் ரஜீம், அல்லாஹும்ம இப்ஃதஹ் லீ அப்வாப ரஹ்மதிக.

பொருள்:

மகத்துவம் கொண்ட அல்லாஹ்வைக் கொண்டும் அவனது திருமுகத்தைக் கொண்டும் அவனது நிலையான மேலாதிக்கத்தைக் கொண்டும் விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டுப் பாதுகாப்புத் தேடுகிறேன். அல்லாஹ்வின் திருப்பெயர் கொண்டு (மஸ்ஜிதில் நுழைகிறேன்) இறையருளும் சாந்தியும் இறைத் தூதர் மீது உண்டாவதா! யா அல்லாஹ்! எனக்காக உனது அருள்வாயில்களைத் திறந்துவிடுவாயாக!

ஏனைய பள்ளிகளுக்கும் இவ்வாறே நுழைய வேண்டும். பின்பு கஃபாவை அடையும் வரை தல்பியா சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்.

*கஃபாவை அடைந்ததும் தல்பியாவை நிறுத்திக் கொள்ள வேண்டும். பின்பு ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிட வேண்டும். முடியுமானால் வலது கரத்தால் தொட்டு முத்தம் கொடுக்க வேண்டும். ஆனால் மனிதர்களுக்கு அந்த இடத்தில் எவ்வித நோவினையும் கொடுக்கக் கூடாது. ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடும் போது (பிஸ்மில்லா வல்லாஹுஅக்பர அல்லது அல்லாஹு அக்பர்) என கூற வேண்டும். முத்தமிட முடியாமல் போனால் தன் கரத்தால் அல்லது தடியால் அல்லது அது போன்ற ஒன்றினால் தொட்டு அதை முத்தமிட்டுக் கொள்ளலாம். அதை தொடுதல் சிரமமாக இருந்தால் அடயாளம் காட்டி அல்லாஹுஅக்பர் என்று சொல்ல வேண்டும். எதை அடயாளம் காட்டுகிறாரோ அதை முத்தமிடக் கூடாது. தவாஃப் செய்பவர் சிறு துடக்கு பெறு துடக்கிலிருந்து சுத்தமாக இருப்பது கட்டாயமாகும். ஏனெனில் தவாஃப் தொழுகையைப் போன்றதாகும். என்றாலும் தாவாஃப்பில் பேச அனுமதியிருக்கிறது.

*கஃபாவை தனது இடது புறமாக வைத்து ஏழு முறை சுற்றி வர வேண்டும். ருக்னுல் யாமானி எனும் இடத்தை முடிமானால் வலது கரத்தால் தொட்டு (பிஸ்மில்லாஹி வல்லாஹுஅக்பர்) என கூறிக் கொள்ளலாம் ஆனால் முத்தமிடக் கூடாது. அது சிரமமாக இருந்தால் அதை விட்டு தவாஃபை தொடர வேண்டும். ருக்னுல் யமானியை நோக்கி அடயாளம் காட்டவோ தக்பீர் சொல்லவோ தேவையில்லை காரணம் நபி (ஸல்) அவர்கள் அவ்வாறு செய்ததாக எந்த

ஆதாரமும் இல்லை. ஹஜருல் அஸ்வத் கல்லைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே சொன்னது போல் அதைத் தொட்டு முத்தமிட்டு தக்பீர் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் அடயாளம் காட்டி தக்பீர் சொல்ல வேண்டும். ஆண்கள் மாத்திரம் முதல் தவா:.பில் முதல் மூன்று சுற்றுக்களில் வேகமாக நடப்பது விரும்பத்தக்கது. முதல் தவா:.பில் வலது தோலை திறந்திருப்பது விரும்பத்தக்கது. அதாவது தனது போர்வையின் நடுப் பகுதியை வலது தோலில் போட்டிருக்க வேண்டும். எல்லா சுற்றுக்களிலும் முடியுமான அளவு திக்ருகளை ஓதல், துஆ கேட்டல் போன்ற அமல்களில் ஈடுபட வேண்டும். தவா:.பில் ஓதுவதற்கு குறிப்பிட்ட துஆவோ அல்லது திக்ருகலோ கிடையாது. மாறாக முடியுமான அளவு திக்ருகளை ஓதிக் கொள்வதோடு அதிகமாக துஆக்களையும் கேட்க வேண்டும். ருக்னுல் யமானிக்கும் ஹஜருல் அஸ்வத் கல்லுக்கும் இடையில் பின்வரும் துஆவை ஒவ்வொரு சுற்றிலும் ஓதிக் கொள்ள வேண்டும்.

{رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ} (٢٠١) سورة البقرة .

நபி (ஸல்) இவ்வாறு ஓதியதாக ஹதீஸ்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
முடியுமானால் ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடுவது கொண்டு ஏழாவது சுற்றை முடிக்க வேண்டும். அல்லது மேலே குறிப்பிட்டது போது அடயாளம் காட்டுவதுடன் தக்பீர் சொல்லி முடிக்க வேண்டும். தவா:.ப் முடிந்த பின் தன் போர்வையால் தனது மேனியை மறைத்துக் கொள்ள வேண்டும்.

*பின்பு முடியுமானால் மகாம் இப்ராஹீம் என்ற இடத்தில் இரண்டு ரக்அத்துகள் தொழ வேண்டும். அந்த இடத்தில் தொழ முடியாமல் போனால் பள்ளியில் எந்த இடத்திலும் தொழுது கொள்ளலாம். முதல் ரக்அத்தில் (குல் யாஅய்யுஹல் காபிரூன்) என்ற சூராவும், இரண்டாவது ரக்அத்தில் (குல் ஹுவல்லாஹுஅஹத்) என்ற சூராவையும் ஓதிக் கொள்ள வேண்டும். இதுவே சிறந்தது. வேறு சூராக்களை ஓதினாலும் குற்றமில்லை. தொழுகை முடிந்ததும் முடியுமென்றால் வலது கரத்தால் ஹஜருல் அஸ்வத் கல்லை தொட்டுக் கொள்ளலாம்.

*பின்பு சபா மலைக்கு ஏறி சற்று நேரம் நிற்க வேண்டும். பின்பு பின்வரும் திருக் குர்ஆன் வசனத்தை ஓத வேண்டும்

{إِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ من شَعَآئِرِ اللّهِ فَمَنْ حَجَّ الْبَيْتَ أَوِ اعْتَمَرَ فَلاَ جُنَاحَ عَلَيْهِ أَن يَطَّوَّفَ بِهِمَا وَمَن تَطَوَّعَ خَيْرًا فَإِنَّ اللّهَ شَاكِرٌ عَلِيمٌ} (١٥٨) سورة البقرة

நிச்சயமாக "ச:.பா" மற்றும் "மர்வா "(எனும் இரு மலைகள்) அல்லாஹ்வின் மார்க்க அடயாளங்களில் உள்ளவையாகும், ஆகவே எவர் (க:.பா என்னும்)அவ்வீட்டை ஹஜ்ஜுஅல்லது உம்ரா செய்தாரோ அவர் மீது அவ்விரண்டையும் சுற்றி வருவது (அவ்விரண்டிற்குமிடையில் ஸயி செய்வது) குற்றமல்ல. இன்னும் எவர் தாமாக உபரியான நன்மையைச் செய்தால் நிச்சயமாக அல்லாஹ் நன்றி பாராட்டுபவன். (அவர்களின் செயல்களை) நன்கறிகிறவன்.
சபா மலை ஏறியதும் கிப்லாவை முன்னோக்கி நிற்பது விரும்பத்தக்கது. பின் அல்லாஹ்வை புகழ்ந்து துதி செய்து பின் வரும் துஆவை கூறிக் கொள்ள வேண்டும்:

"لاَ الهَ إلاّ الله، وَاللهُ أَكْبَــرْ، لاَ إلهَ إلاَّ للهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ، لَهُ المُلْكُ وَلَهُ الحَمْدُ وَهُوَ عَلىَ كُلِّ شَيْءٍ قَدِيْر. لاَ إِلَهَ إلاَّ للهُ وَحْدَهُ، أَنْجَــزَ وَعْدَهُ، وَنَصرَ عَبْدَهُ، وَهَزَمَ الْأَحْزَابَ وَحْدَه"

**லாஇலாஹ இல்லல்லாஹ், வல்லாஹு அக்பர், லாஇலாஹ இல்லல்லாஹுவஹ்தஹு லா ஷரீக லஹு, லஹுல் முல்க் வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர். லாஇலாஹ இல்லல்லாஹுவஹ்தஹ், அன்ஜஸ வஃதஃ, வனசர அப்தஹ், வஹசமல் அஹ்ஸாப வஹ்தஹ்.**

**இந்த துஆவை மூன்று முறை ஓதி விட்டு இரு கரங்களையும் ஏந்தி பிராத்தனை செய்ய வேண்டும். பின்பு மர்வா மலையை நோக்கி நடக்க வேண்டும். இடையில் பச்சை நிர அடயாளமிடப் பட்ட இடத்தை அடைந்ததும் அவசரமாகச் செல்ல வேண்டும். ஆனால் பெண்கள் அவ்வாறு செய்யக் கூடாது. மர்வாவை அடைந்ததும் சற்று நின்று சபாவில் செய்தது போன்று செய்ய வேண்டும். ஆனால் ஏற்கெனவே ஓதிய குர்ஆன் வசனம் ஓதத் தேவையில்லை. ஆரம்பமாக சபாவிற்கு ஏறும் போது மாத்திரமே அந்த வசனத்தை ஓத வேண்டும். நபி (ஸல்) அவர்களும் இவ்வாறே செய்தார்கள்.**

**மீண்டும் மர்வாவில் இருந்து சபாவுக்கு நடக்க வேண்டும். அவசரமாக நடக்க வேண்டிய இடத்தில் அவசரமாக நடக்க வேண்டும். இவ்வாறு ஏழு முறை நடக்க வேண்டும். போவது ஒரு சுற்று வருவது ஒரு சுற்று என்றே கனக்கிட வேண்டும். தேவை ஏற்படின் வண்டிகளில் ஏறிச் செல்வது குற்றமில்லை. சயி செய்யும் போது முடியுமான அளவு திக்ருகளை ஓதிக் கொள்வதுடன், பிராத்தனைகளையும் அதிகமாக கேட்டுக் கொள்ள வேண்டும். சிறு துடக்கு பெறு துடக்கிலிருந்து சுத்தமாக இருத்தல் சிறந்தது. ஆனால் வுளு இல்லாமல் சயி செய்தால் ஏற்றுக் கொள்ளப்படகிறது.**

***சயி முடிவடைந்து விட்டால் தலைமுடியை முழவதுமாக குறைக்க வேண்டும் அல்லது சிரைக்க வேண்டும். முழுமையாக சிரைப்பதே சிறந்ததாகும். ஹஜ்ஜிக்காக சென்று உம்ரா செய்தால் தலை முடியை குறைத்துக் கொள்ளல் சிறந்தது. மீதியை ஹஜ்ஜில் சிரைத்துக் கொள்ளலாம். பெண்ணைப் பொறுத்த வரை தலை முடியை ஒன்று சேர்த்து விரல் நுனியளவு வெட்டிக் கொள்ள வேண்டும். மேற் குறிப்பிட்ட பிரகாரம் ஒருவர் அனைத்தையும் செய்து விட்டால் அவரின் உம்ரா பரிபூரணமடைகிறது. இறைவனுக்கே எல்லாப் புகழும். இஹ்ராம் அணிந்திருந்த போது எதுவெல்லாம் தடையாக இருந்ததோ அனைத்தும் தற்போது ஆகுமாகின்றது.**

**அல்லாஹ் நமக்கு மார்க்கத்தை விளங்கவும் அதில் உறுதிப் பாட்டையும் வழங்குவானாக. மேலும் அனைவருடைய தேட்டங்களையும் நிறைவு செய்து வைப்பானாக. நிச்சயமாக அவனே தூய்மையானவனும் வாரி வழங்கும் வள்ளலுமாவான்.**

இது சவுதி அரேபியாவின் தலைமை முப்தியும், அறிஞர் சபை, மார்க்கத்தீர்ப்பு அமைப்பின் தலைவருமான அஷ் ஷெய்க் அப்துல்லாஹ் பின் பாஸ் றஹிமஹுல்லாஹ் அவர்களால் தொகுகக்பட்டதாகும்.

தமிழில் மவ்லவி முஹம்மத் இம்ரான் (கபூரி)